SEC/PN/IT/2026/06
05/11/2026

உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

பொதுமக்களுக்கும் சம்பந்தப்பட்ட அனைத்துப் பொறுப்பதிகாரிகளுக்குமான அறிவித்தல்

குறிப்பிடப்பட்ட பரிவர்த்தனைகளுக்காக வரி செலுத்துவோர் அடையாள இலக்கச் (TIN) சான்றிதழை கட்டாயமாகச் சமர்ப்பித்தல்

2026 செப்டெம்பர் 22 ஆம் திகதியிடப்பட்ட SEC/PN/IT/2026/05 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைவாக, 2026 நவம்பர் 01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில், குறிப்பிடப்பட்ட எட்டு (08) வகையான பரிவர்த்தனைகளில் ஏதேனும் ஒன்றில் ஈடுபடும் தனிநபர்கள் செல்லுபடியாகும் வரி செலுத்துவோர் அடையாள இலக்கச் (TIN) சான்றிதழைச் சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாகும் என உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. இக்கட்டாயத் தேவை, 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 103 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவிற்கமைவாகவும், 2026 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்தச்) சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

எனினும், மேற்குறிப்பிட்ட பரிவர்த்தனைகளில் ஈடுபடும் தனிநபர்களிடையே மாத்திரமன்றி, பொதுமக்களிடையேயும் வரி செலுத்துவோர் அடையாள இலக்கச் (TIN) சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதற்கான அதிகளவிலான கேள்வி காணப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையைக் கருத்திற்கொண்டும், நிதி அமைச்சின் அனுமதியுடனும், மேற்குறிப்பிட்ட கட்டாயத் தேவையை நடைமுறைப்படுத்துவதை 2027 ஏப்ரல் 01 ஆம் திகதி வரை ஒத்திவைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நீடிக்கப்பட்ட காலப்பகுதியில், ஏற்கனவே வரி செலுத்துவோர் அடையாள இலக்கத்தைப் (TIN) பெற்றுப் பதிவு செய்துள்ள தனிநபர்கள் தமது TIN சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதற்கான மாற்று மற்றும் மேலும் வசதியான முறைகளை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அறிமுகப்படுத்தும்.

அத்துடன், இதுவரை TIN இலக்கத்தைப் பெற்றுக்கொள்ளாத தனிநபர்கள் இணையவழி மின்னணுச் சேவைகள் (e-Services) தளத்தைப் பயன்படுத்தி அதனைப் பெற்றுக்கொள்ளுமாறு திணைக்களம் ஊக்குவிக்கின்றது.

உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்

TAXES - FOR A BETTER FUTURE